**புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005**
**எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : குடியிருத்தலில் பராமரிப்பு வசதிகளை**

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## குடியிருத்தலில் பராமரிப்பு வசதிகள், வெடரன்களுக்கென நியமிக்கப்பட்ட வசதிகள் மற்றும் உளநோய் மருத்துவவசதிகள்

அனைத்துப் பொது இடங்கள் மற்றும் வேலை பார்க்கும் இடங்களில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டு இருக்கையில் திட்டவட்டமான குறிப்பிட்ட வசதிகளுக்கான இயக்குவோர், கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடித்தல் பகுதி (CSA) ஒன்றை திறந்து இயக்கி வரலாம். இதனால் குடியிருப்போர் புகைபிடிக்க இயலும்.

இந்த திட்டவட்டமாக குறிப்பிட்ட வசதிகள் என்பவை, சட்டத்தால் வரையறைக்கப்பட்ட நீண்டகால பாரமரிப்பு (LTC) இல்லங்களாகும், மற்றும்/அல்லது ஓய்வெய்தியவர்களின் இல்லமாக அல்லது உதவியளிக்கும் குடியிருப்பகலாக இயங்கும் குடியிருத்தலில் பராமரிப்பு வசதிகளாகும். இவை சுகாதாரம் மற்றும் நீண்டகால பராமரிப்பு அமைச்சகம் அல்லது சமுதாய மற்றும் சமூக சேவைகள் அமைச்சகத்தால் நிதி உதவி செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் இவற்றுடன், *மன நல சட்டத்தின்* கீழ் நியமிக்கப்பட்ட மன நோய் மருத்துவ வசதிகள் மற்றும் SFOA விதிகளின் கீழ் வெடரன்களுக்கான வசதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## இயக்குவோர் கடமைப் பொறுப்புக்கள்

உள்ளூர் நகராட்சி துணைச் சட்டத்தின் கீழ் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்ட, குறிப்பாக நியமிக்கப்பட்ட புகை பிடிப்பு அறைகள் (DSRs), இப்போது தடை செய்யப்பட்டுள்ளன. எனினும், குறிப்பாக நியமிக்கப்பட்ட (LTC) இல்லங்களை இயக்குவோர்,

ஒரு  கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதியைக்(CSA)கட்டி, பின் அதை இயக்குவதை தேர்ந்தெடுக்கக்கூடும். கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதிகளுக்கென குறிப்பிட்ட சில தேவைகள் உள்ளன. இத்தேவைகளை சட்டத்தின் பிரிவு எண் 18-ன் கீழ் மற்றும் அதன் இணைக்கப்பட்ட ஷெட்யூல் எண் 1 மற்றும் 2-ன் கீழ் காணலாம். (www.elaws.gov.on .ca/DBLaws/Regs/English/060048_e.htm). உத்தேசிக்கப்பட்டுள்ள CSA-வின் உரிமையாளர், மேற் குறிப்பிட்ட தேவைகளை டிசம்பர் 31, 2006-அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்வார் என்பதை குறிக்கும் திட்டங்களை ஜூன் 30, 2006 அன்றோ அல்லது முன்போ சமர்பித்து விட்டால், CSA-வின் கட்டுமான மற்றும் பறாமறிப்பு தேவைகள் டிசம்பர் 31, 2006 வரை இதற்கெதிராக பொருந்தாமல் போகும்.

## வேலை கொடுப்பவரின் கடமைப் பொறுப்புகள்

பணியில் அமர்த்துவோர் ஒவ்வொருவரும்:

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என ஊழியரும், குடியிருப்போறும் மற்றும் பார்வையாளர்களும் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- தங்கள் ஸ்தாபனங்களில் ஊழியரும், குடியிருப்போறும் மற்றும் பார்வையாளர்களும் புகை பிடிக்காமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.
- கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிக்கும் பகுதியை வழங்குவதாக இருந்தால்,  வேலை கொடுப்பவர் சட்டம் மற்றும் அதன் விதி முறைகளை முழுவதும் பின்பற்றுபவராக இருக்க வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவையான அடையாளக் குறிகளை, கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதிகளின் எந்த ஒரு வாயிலின் வெளிப்புறமும் காட்சிக்கு வைப்பது உள்ளிட்டவை இதில் அடங்கும்:
    - o "இங்கு புகை பிடிக்க நீங்கள் இங்கு வாழ்பவராக இருக்கவேண்டும். மறைமுகப் புகையின் மோசமான ஆரோக்கியப் பாதிப்புக்கள் காரணமாக ஊழியர்கள் இங்கே நுழையத் தேவையில்லை" என்ற வாக்கியங்களைக் கொண்ட ஒரு அடையாளச் சின்னம்.
    - o கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதியின் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கையை குறிப்பிடும் ஒரு அடையாளச் சின்னம்.
- *நோ ஸ்மோகிங்(புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம்  ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதிகள்

- கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதியாக தகுதி பெறும் பொருட்டு, சட்டம் மற்றும் விதிமுறைகளின் அனைத்து தேவைகளையும் ஒரு அறை சந்திக்க வேண்டியது அவசியமாகும். விதிகளுடன் ஒத்துபோகும் வகையிலான ஒரு காற்றோட்ட வசதி முறை மற்றும் அடையாளக் குறி (தயவு செய்து மேலே பார்க்கவும்) போன்றவை இதில் அடங்கும்.
- அறையில், குடியிருப்பவர் மட்டுமே புகை பிடிக்கலாம் (விருந்தாளிகள் குடியிருப்பவர்களுடன் வரலாம், ஆனால் அவர்கள் அறையில் புகைபிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை)
- புகைபிடிக்க விரும்பும் குடியிருப்போர், இயக்குபவரின் கருத்தின்படி, தானாகவே சுதந்திரமாக புகை பிடிக்கும் திறன் உடையவராக இருப்பது அவசியமாகும். புகை பிடிக்க ஊழியர்கள் உதவி தேவைப்படக்கூடாது.
- கட்டுப்படுத்தப்பட்ட புகை பிடிப்பு பகுதியில் ஊழியர்கள் நுழைய வேண்டிய தேவை இல்லை.

## புகை பிடிப்பு புகலிடங்கள்

தன்னிடம் பணிபுரியும் புகை பிடிக்கும் ஊழியர்களுக்கு புகைப்பிடிப்பு புகலிடம் ஒன்றை பணியிடம் வெளியே இயக்குனர் ஒருவர் அமைத்துக் கொடுக்கலாம். வெளிப்பக்கத்தில் புகை பிடிப்பு புகலிடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும் இயக்குனர், புகை பிடிப்பு புகலிடத்தில் இரண்டு சுவர்களும், ஒரு கூரையும் தவிர வேறு எதுவுமில்லாமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.

## அமலாக்கம்

சட்டத்தை அமல் படுத்தும் பொருட்டு, உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகளை சோதனைகளையும், விசாரணையும் மேற்கொள்ளும்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.



Ontario

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும்  நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario